பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .02.2019

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு பிப்ரவரி மாதம் ம் நாள் ( .02.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களின் ஜனவரி 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் ஜனவரி 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | இந்நகராட்சிக்கு சொந்தமான கைக்கோலார் ஊரணியில் அமைந்துள்ள தினசரி நாளங்காடியில் (சூப்பர் மார்க்கெட்) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் முன்புறமுள்ள ஷட்டர் போட்ட 21 கடைகள் மற்றும் பின்புறம் உள்ள திறந்த வெளிக்கடைகள் 8 மொத்தம் 29 கடைகள் (நீங்கலாக) 1 பின்புறம் உள்ள ஷட்டர் போட்ட 21 கடைகளுக்கு கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.40/– வீதம் 2 பின்புறம் உள்ள திறந்தவெளி 118 கடைகளுக்கு கடை ஒன்றுக்கு ரூ.20/– வீதம் தினசரி வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2022 ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள அரசானை நிலை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2019–2020) ஓராண்டிற்கு 14/02/2019ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரத்தின்படி குத்தகைதாரர்கள் ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ.எண்</td><td>வரப்பெற்ற குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>பொதுஏலக் கேள்வி குத்தகை ரூ.</td></tr><tr><td>1</td><td>திரு.இந்திரஜித்,<br>3/450, சௌந்தரம் இல்லம்,<br>பாலன் நகர்,<br>பரமக்குடி.</td><td>8,50,000/–</td></tr><tr><td>2</td><td>திரு.எம்.சங்கர்,<br>எம்.ஜீ.ஆர். நகர்,<br>பரமக்குடி.</td><td>8,49,500/–</td></tr></table><br>அலுவலகக் குறிப்பு–<br>மேற்கண்ட இனத்திற்கு இரண்டு குத்தகை தாரர்கள் மட்டும் கலந்து கொண்டதில் வ.எண்.1. திரு.இந்திரஜித் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.8,50,000/– ம் கோரியுள்ள இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.7,67,108/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.8,04,825/–ஐ காட்டிலும் திரு.இந்திரஜித் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.8,50,000/– கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க. எண் 3085/2018/சி2. |

பொருள்.4

இந்நகராட்சி கழிவு நீர் புல் பண்ணை நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள கினியா புல்லை அறுத்து விற்பனை செய்யும் உரிமத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2022ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின் படி (2019—2020) ஓராண்டிற்கு 14.02.2019ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரத்தின் படி குத்தகைதாரர்கள் ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரப்பெற்ற குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | பொதுஏலக் கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.சி.நாகராஜன், 3/35, அய்யர் தெரு, உரப்புளி | 1,34,000/— |
| 2 | திரு.எஸ்.சந்திரன், கீழத்துாவல், பரமக்குடி | 1,38,500/— |
| 3 | திரு.எம்.கணேசன், கீழத்துாவல், பரமக்குடி. | 1,36,000/— |
| 4 | திரு.எஸ்.நாகநாததுரை, உரப்புளி, பரமக்குடி. | 1,33,000/— |

அலுவலகக் குறிப்பு—

மேற்கண்ட உரிமத்திற்க்கு நான்கு குத்தகைதாரர்கள் கலந்து கொண்டதில் வ.எண்.2 திரு.எஸ்.சந்திரன் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.1,38,500/— கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,01,189 மற்றும் சென்றாண்டு அலுவலக வசூல் ரூ. 1,05,000/—ஐ காட்டிலும் திரு.எஸ்.சந்திரன் என்பவரது உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.1,38,500/— கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3085/2018/சி2.

பொருள்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை அருகில் உள்ள சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.5/— வீதம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2022ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள அரசாணை நிலை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின் படி (2019—2020) ஓராண்டிற்கு 14.02.2019ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரத்தின்படி குத்தகைதாரர்கள் ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரப்பெற்ற குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | பொது ஏலக் கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.தனலெட்சுமி, 3/538, பொண்னையாபுரம், பரமக்குடி | 76,000/— |
| 2 | திருமதி.எஸ்.செல்வி, 3/451, பாலன் நக, பரமக்குடி. | 75,500/— |

அலுவலகக் குறிப்பு—

மேற்கண்ட இனத்திற்கு இரண்டு குத்தகைதாரர்தகள் கலந்து கொண்டதில் வ.எண்.1 திருமதி.ஆர்.தனலெட்சுமி என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.76,000/—ம் கோரியுள்ளார். இத்தொகை அலுவலக வசூல் ரூ.95,000/—ஐ ஒட்டி வருவதாலும், அலுவலக பணியாளர் பற்றாக்குறை மற்றும் அவரது ஊதியத்தை கணக்கீடும் பொழுது திருமதி.ஆர்.தனலெட்சுமி என்பவரது உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.76,000/—ஐ மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3085/2018/சி2

பொருள்.6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முத்தாலம்மன் கோவில் தெரு, அங்காளம்மன் கோவில் தெரு மற்றும் சென்குப்தா தெரு ஆகிய தெரு ஓரங்களில் காய்கனி வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் நாள் ஒன்றுக்கு ரூ.10/— வீதம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2022ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்து கொள்ள அரசானை நிலை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின் படி (2019—2020) ஓராண்டிற்கு 14.02.2019ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரத்தின்படி குத்தகை தாரர்கள் ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரப்பெற்ற குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | பொது ஏலக்கோற தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.நாகராஜன், உரப்புளி அஞ்சல், பரமக்குடி. | 3,65,000/— | — |
| 2 | திரு.எ. முஸாக்கனி, காமராஜர் நகர், பரமக்குடி. | 3,60,000/— | 4,41,000/— |
| 3 | திரு.எம்.கணேசன், கீழத்தூவல், பரமக்குடி | 3,50,000/— | — |

அலுவலகக் குறிப்பு—

மேற்கண்ட இனத்திற்கு மூன்று குத்தகை தாரர்கள் கலந்து கொண்டதில் வ.எண்.2ல் திரு.எ.மூஸாக்கனி என்பவர் ஒப்பந்ததப்புள்ளியினும் கலந்து கொண்டு உச்சவரம்பு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,41,000/—ம் கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,75,489/— மற்றும் சென்றாண்டு தொகை ரூ.1,84,118/—ஐ காட்டிலும் திரு.எ.மூஸாக்கனி என்பவரது உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,41,000/— கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3085/2018/சி2

பொருள்.7

இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையில் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி சுற்றுப்புற சுகாதாரப் பணிகளுக்காகவும், பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், வாரச்சந்தை, மீன்மார்க்கெட், உழவர் சந்தை மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகளுக்காகவும், முக்கிய திருவிழாக்களில் சுகாதாரப் பணிகளுக்காகவும், டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு தேவையான கிருமி நாசினிகள், நீர்த்த சுண்ணாம்புத் தூள் – 7400 கிலோ, பிளீச்சிங் பவுடர் — 700 கிலோ மற்றும் பினாயில் – 138 லிட்டர் மட்டுமே தற்பொழுது அலுவலக இருப்பில் உள்ளதாகவும், மேற்கண்ட கிருமி நாசினிகள் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே பயன்படுத்த இயலும் என்றும், மேலும், நகரின் முக்கிய திருவிழாக்களான முத்தலாம்மன் கோவில் பூச்சொரிதல் திருவிழா, பங்குனி பால்குடத் திருவிழா மற்றும் சித்திரை திருவிழா போன்றவை நடைபெற உள்ளதால், கீழ்கண்ட கிருமி நாசினிகளை கீழ்கண்ட அளவுகளில் வாங்கி வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

1. நீர்த்த சுண்ணாம்புத்தூள் — 30000 கிலோ
2. பிளீச்சிங் பவுடர் — 2000 கிலோ
3. பினாயில் — 500 லிட்டர்

| | |
|---|---|
| | மேற்கண்ட கிருமி நாசினிகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதி ரூ.3,00,000/— உத்தேச செலவினத்தில் அரசு நிறுவனமான Q.816, இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலை லிட்., என்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.3,00,000/— உத்தேச செலவினத்தில் அரசு நிறுவனமான Q.816, இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலை லிட்., என்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | இந்நகராட்சி பொதுசுகாதார டிராக்டர் வாகனம் TN 65 AZ 1094க்கு வருடாந்திர தகுதிச் சான்று 22.01.2019ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதாகவும், அதன் பொருட்டு பழுதுப் பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில், பழுதுப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1. N கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.58300/—க்கும், 2. செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.60800/—க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>எனவே, ரூ.60,000/— உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி, பழுதுப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.60,000/— உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி, பழுதுப் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.9 | இந்நகராட்சி பொதுசுகாதார காம்ப்பாக்டர் வாகனம் TN 65 AY 3115க்கு, வருடாந்திர தகுதி சான்று 17.02.2019ம் தேதியுடன், முடிவடைவதாகவும் அதன்பொருட்டு பழுதுப்பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில், பழுதுப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், மேற்கண்ட நிறுவனம் ரூ.156337/—க்கு விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>எனவே, ரூ.160000/— உத்தேச செலவினத்தில் அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனம் மூலம் பழுதுப்பணிகள் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட, நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.160000/— உத்தேச செலவினத்தில் அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனம் மூலம் பழுதுப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

<table>
<tr><td>பொருள்.10</td><td>இந்நகராட்சி பொதுசுகாதார காம்ப்பாக்டர் வாகனம் TN 65 AY 3116க்கு, வருடாந்திர தகுதி சான்று 17.02.2019ம் தேதியுடன், முடிவடைவதாகவும் அதன்பொருட்டு பழுதுப்பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில், பழுதுப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், மேற்கண்ட நிறுவனம் ரூ.163050/—க்கு விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>எனவே, ரூ.160000/— உத்தேச செலவினத்தில் அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனம் மூலம் பழுதுப்பணிகள் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட, நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.160000/— உத்தேச செலவினத்தில் அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக TV Sundaram Iyangar & Sons Ltd, Manjor, என்ற நிறுவனம் மூலம் பழுதுப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>இந்நகராட்சி பொதுசுகாதார டிப்பர் வாகனம் TN 65 A 6343க்கு, இரண்டு முன்புற டயர்கள் முற்றிலும் தேய்மானம் அடைந்துள்ளதால், வாகனம் அடிக்கடி பஞ்சராகி வாகனத்தினை இயக்க முடியாத நிலை உள்ளதாகவும், அதன் பொருட்டு இரண்டு புதிய முன்புற டயர்கள் (7.50 x 16 SML 99 TTP) வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டுள்ள இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்</th><th>விநியோகம் செய்ய வேண்டிய பொருட்கள்</th><th>ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி</th><th>அம்ரித்தா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி</th></tr>
<tr><td></td><td>7.50 x 16 SML 99 TTP டயர்கள் 2 எண்ணம்</td><td>ரூ.16000</td><td>ரூ.16200</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில், குறைந்த தொகைக்கு டயர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய, ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குறைந்த தொகைக்கு டயர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய, ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8th SHPC ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019ன்படி இந்நகராட்சிக்கு தேவையான பேட்டரி கார் வாகனங்கள் 32 எண்ணம் வாங்கும் ரூ.57.60 லட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1. M/S சுசி இன்டஸ்ட்ரீஸ், சென்னை</td><td>ரூ.57,28000/–</td></tr>
<tr><td>2. M/S ஈஸ்வரி மோட்டார்ஸ், பரமக்குடி.</td><td>ரூ.57,34,400/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரர், M/S சுசி இன்டஸ்ட்ரிஸ், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.13</td>
<td>
தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8th SHPC ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019 ன்படி இந்நகராட்சிக்கு தேவையான இலகுரக வாகனம் 5 எண்ணம் வாங்கும் ரூ.28.00 லட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தபுள்ளிகள் மட்டும் வரப்பெற்றன.
<table>
<tr><td>1.M/S ABT இன்டஸ்ரிஸ், லிமிடெட், கோயம்புத்தூர் சென்னை</td><td>ரூ.2760500/–</td></tr>
<tr><td>2.M/S கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி)லிமிடெட், சேலம்</td><td>ரூ.2761500/–</td></tr>
<tr><td>3.M/S லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர்</td><td>ரூ.2724825/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரர், M/S லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்
</td>
</tr>
<tr>
<td>பொருள்.14</td>
<td>
பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வறட்சி நிவாரணத் திட்டம் 2019 ஆண்டின் கீழ் கள்ளிக் கோட்டை தலைமை நீரேற்று நிலையம் அருகில் 8 விட்டமுள்ள ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் பணிக்கு ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் 15/2/19 தேதி ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.96% அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு–<br>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி 0.04 கொடுத்துள்ள திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்படி குடிநீர் பணியில் அவசியத்தைக் கருதி மற்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.15</td>
<td>
பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்23 வறட்சி நிவாரண திட்டம் 2019 ஆண்டின் கீழ் மணிநகர் நீரேற்று நிலையம் அருகில் 8 விட்டமுள்ள ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தல் பணிக்கு ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் 15/02/19 தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 2 | திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை வி 1.12% அதிகம் |

அலுவலகக் குறிப்பு—

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி 0.05 கொடுத்துள்ள திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்கண்ட குடிநீர் பணியின் அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று –வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

**பொருள்.16**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வறட்சி நிவாரணத் திட்டம் 2019 ஆண்டின் கீழ் தெளிச்சாத்த நல்லூார் மின் மோட்டார் பொருத்துதல் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் 15/02/19 தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம். சங்கர், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை காட்டிலும் 0.04% குறைவு |
| 2 | திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

அலுவலகக் குறிப்பு—

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி 0.04 கொடுத்துள்ள திரு.எம். சங்கர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தைக் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள்.17**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சி நிவாரண திட்டம் 2019 ஆண்டின் கீழ் 30 எண்ணம் ஆழ்துளைக் கிணறுகளை சுத்தம் செய்யும் பணிக்கு ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் 15/02/2019 தேதி, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 2 | திரு.எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 0.71% அதிகம் |

அலுவலகக் குறிப்பு—

மேற்படி வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி 0.03 கொடுத்துள்ள திருமதி.ஐ.குழந்தையம்மாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள்.18**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24ல் வறட்சி நிவாரணத் திட்டம் 2019 ஆண்டின் கீழ் காட்டுப்பரமக்குடி தலைமை நீரேற்று நிலையம் அருகில் 8 விட்டமுள்ள ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் பணிக்கு 10.00 லட்சம் மதிப்பீட்டில் 15/02/2019 தேதி ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை காட்டிலும் 0.05% குறைவு |
| 2 | திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை காட்டிலும் 0.89% அதிகம் |

அலுவலகக் குறிப்பு–

மேற்படி வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி 0.05 கொடுத்துள்ள திருமதி.ஐ. குழந்தையம்மாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள்.19**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு.30 உழவர் சந்தை பகுதியில் தினசரி சந்தையாக திறந்தவெளி காய்கறி கடைகளுக்கான செட் அமைக்கும் பணிக்கு ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 15.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர் ஒப்பந்ததாரர் | 0.40% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |
| 2 | திரு. பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.20**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப்பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதியும் இல்லாததால் அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படுவதால், மேற்படி பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதி சாலைகள் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.21**

இந்நகராட்சிக்கு கஜா புயலால் ஏற்பட்டுள்ள சாலை பழுதுகளை சீர் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடித எண்.22386/2018/இ2, நாள்.02.01.2019ன்படி ரூ.3.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 15.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர் ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் | 0.12% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>ந.க.எண்.335/2019/இ1</td></tr>
<tr><td>பொருள்.22</td><td>பரமக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அலுவலக வரிவசூல் மையத்திற்கு மேல் உள்ள முதல் தளத்தில் டைல்ஸ் தளம் உடைந்தும், வருவாய் பிரிவில் உள்ள கழிப்பறை மற்றும் மேற்கூரை பழுதடைந்து உள்ளதை மராமத்துப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.23</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28 சுந்தர்ராஜபட்டிணம் மற்றும் பொன்னையாபுரம் பகுதியில் புதிதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு ரூ.2,40,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 15.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர்</td><td>1.84% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு. பி.கோவிந்தன்,<br>ஒப்பந்ததாரர்</td><td>0.07% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.07% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.24</td><td>இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட தெருவிளக்குகள் பராமரிக்க தேவையான பணியாளர்கள் விநியோகம் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 22.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>M/S. Man power Agencies, Paramakudi</td><td>0.26% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S. Exsernet, Madurai.</td><td>2.83% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S. Man power Agencies, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.25</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட காவேரி கூட்டு குடிநீர் திட்டம் வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தினசரி வழங்கப்பட்டு வரும் குடிநீருக்கான கணக்கீடு வேறுபாடாக உள்ளது. எனவே, மேற்படி நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய்களில் அளவுமானி பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி பொருத்தப்பட்ட அளவுமானிகளில் தினசரி கணக்கீடு செய்யும் பொருட்டும் அளவுமானிகளை உரிய பாதுகாப்புடன் பராமரிக்கும் பொருட்டு வால்வு தொட்டிகள் அமைத்து இதர பாகங்கள் பொருத்துதல் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு.</td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.26 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள TN 65W 9658 ஈப்பு வாகனத்தில் ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல், நான்கு சக்கரங்களுக்கும் கிரீஸ் மேக்கிங் செய்தல், டீசல் பம்பு சர்வீஸ், வீல் அலைய்மெண்ட் செய்து வீல் பேலன் சரி செய்து பவர் ஸ்டேரிங் செக்கப் செய்து ஆக்ஸிலேட்டர் பெடல் ஆகிய பழுதுகள் ஏற்பட்டுள்ளதை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.18,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் குடிநீர் விநியோக அத்தியாவசியம் கருதி மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர்செய்ய விலைப்புள்ளிகள், கீழ்கண்டவாறு பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>1. பரமக்குடி மோட்டார்ஸ், பரமக்குடி– ரூ.17,180/–<br>2. எம்/எஸ் மதுரை மோட்டார்ஸ், உலகுநேரி, மதுரை– ரூ.18,060/–<br>மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள பரமக்குடி மோட்டார்ஸ், பரமக்குடி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது,<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.27 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8ல் தேவேந்திர நகர் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துவிட்டதால், அப்பகுதி மக்கள் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, குடிநீர் அத்தியாவசியம் கருதியும், அப்பகுதி பொதுமக்களின் வேண்டுக்கொளின்படியும், குடிநீர் விநியோக பகிர்மான குழாய் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,65,000/–க்கு மன்றத்தின் அனுமதி அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.28 | இந்நகராட்சியில் 8வது SHPC திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கான வாகனங்கள் வாங்கும் பணிக்கு 2018–19ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்காக விளம்பரம் செய்த வகையில் “Bright Advertising,” சென்னை நிறுவனத்திற்கு ரூ.57382/–ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.29 | மாண்புமிகு.தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டப்பேரவையில் விதி எண்.110–இன் கீழ் 11.02.2019 அன்று அறிவிக்கப்பட்டதன்படியும், அரசாணை (நிலை) எண்.20, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (மஅதி3) துறை நாள்.11.02.2019–இன்படியும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்ப நபர்கள், AAY திட்ட பயனாளிகள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழங்கும் திட்டத்திற்கு உரிய படிவங்கள் மற்றும் ஒப்புகை சீட்டுக்களை அச்சகத்தில் அச்சடித்து பெறவும், நகல்கள் எடுக்கவும், வரப்பெறும் விண்ணபங்களில் உள்ள பயனாளிகளின் விபரங்களை கனினி வழியாக www.tnpoverty.org/ என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் கீழ்கண்டுள்ள விபரப்படியான பணிகளுக்கு உத்தேச செலவினம் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>1) இந்நகராட்சியில் 2004ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் |

உள்ள 3107 பயனாளிகளின் பெயர் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–

2) நியாய விலைக் கடைகளில் 35 கிலோ அரிசி பெறும் ஏழை ( AAY திட்டம்) பயனாளிகள் 167 நபர்களின் பெயர் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3000/–

3) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவோர வியாபாரிகளின் 220 பயனாளிகள் பெயர் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3000/–

4) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைக் கண்டறிய புதிய விண்ணப்பங்கள், ஒப்புகைச் சீட்டுக்களை அச்சடித்தல், ஜெராக்ஸ் நகல்கள் எடுத்தல் போன்ற செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.50,000/–

5) புதியதாக பெறப்படும் விண்ணப்பங்களை 210.2012.62.17:8080/PTSlc/login.jsp என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய உத்தேச செலவினமாக ரூ.1,50,000/–

எனவே மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.30

இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் TN 65w 9658 பழுது ஏற்பட்டு இயங்க முடியாமல் இருந்ததை சரி செய்யும் பொருட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 15.02.2019ந் தேதி உள்ளூர் நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | M/S மதுரை மோட்டார்ஸ், மதுரை | ரூ.18,060/– |
| 2 | M/S PMK மோட்டார்ஸ், பரமக்குடி | ரூ.17,180/– |

அலுவலகக்குறிப்பு–

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/S PMK மோட்டார்ஸ், பரமக்குடி நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் ஏற்றுக் கொள்ளலாம். மேலும் குடிநீர் மற்றும் தேர்தல் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி ஆணையர்/ தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி, உத்தரவு வழங்கி பணி செய்து முடித்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.31

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.கஎண்.18281/2018/BO1 நாள்.31.01.2019ன் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 22.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 26.02.2019 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு ரூ.லட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| 1 | சிப்பம்–III<br>வைகை நகர், 10வது தெரு, சேதுபதி நகர், | 150.00 | 1) திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 6.93 % மதிப்பீட்டை |

| | | | |
|---|---|---|---|
| | காட்டுப்பரமக்குடி கிழக்கு 2வது குறுக்கு தெரு, மஞ்சள்பட்டினம் பிள்ளையார் கோவில் தெரு, கிருஸ்துவ காலனி, சங்கு தெரு, மந்திரி மேனன் தெரு, எல்.ஐ.சி. பின்புறம் குறுக்கு தெரு, மீராமுகைதீன் தெரு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் மற்றும் பாலன் நகர்2வது மற்றும் 4வது தெரு, பொன்னையாபுரம் 4வது தெரு, எம்.ஜி.ஆர். நகர் 4வது தெரு, காட்டுப்பரமக்குடி, ஆதிதிராவிடர் காலனி, சிலோன் காலனி குறுக்குத் தெரு மற்றும் வி.பி. காலனி தெற்கு மூன்றாவது தெரு, எமனேஸ்வரம் ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | | விட கூடுதல்<br><br>2) திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர் 4.93% மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ. குழந்தையம்மாள் ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 6.93% கூடுதலாகவும், திரு. வி. மேகவர்ணம் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 4.93% கூடுதலாகவும், இருப்பதால் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திரு.வி.மேகவர்ணம், ஒப்பந்ததாரர், திரு.வி.மேகவர்ணம் என்பவர் 4.93% சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.வி. மேகவர்ணம், 4.93 % கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

பொருள்.32

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.களண்.18281/2018/BO1 நாள்.31.01.2019ன் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.197.70 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு22.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 26.02.2019 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு ரூ.லட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| 1 | சிப்பம்–I<br>புதுநகர், வைகைநகர், கருப்பணசாமி கோவில் தெரு, பர்மா காலனி, (காமராஜ் நகர்) பாரதிநகர்கிழக்கு குறுக்குத் தெரு, அங்கு நகர் குறுக்குத் தெரு, காளிதாஸ் பள்ளிக்கூடத் தெரு, கிரி அம்பலம் நாராயணன் தெரு, காட்டுப்பரமக்குடி, முல்லை நகர் குறுக்குத் தெரு, கிழக்கு குறுக்குத் தெரு, பாலன் நகர் குறுக்குத் தெரு, சிங்காரத் தோப்பு, பெருந்தேவி நகர், பர்மா காலனி, வி.பி. நகர், மற்றும் எஸ்.எஸ். காலனி, ஆகிய தெருக்களில் பேவர் | 197.70 | 1) திரு. எம்.கே. திருமுருகன், இராமநாதபுரம் ஒப்பந்ததாரர் 8.04% கூடுதல்<br><br>2) வெங்கடேஷ்வரா கன்ஸ்ட்ரக்ஷன், இராமநாதபுரம் ஒப்பந்ததாரர் 4.81% கூடுதல்<br>3) திருமதி. ஐ. குழந்தையம்மாள், 4.80 % |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் | | கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.கே. திருமுருகன், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 8.04% கூடுதலாகவும், வெங்கடேஷ்வரா கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 4.81% கூடுதலாகவும், திருமதி. ஐ. குழந்தையம்மாள், 4.80 % கூடுதலாகவும் இருப்பதால் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.80 சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. ஐ. குழந்தையம்மாள், 4.80 % கூடுதல் சதவீதம் கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

பொருள்.33

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.களண்.18281/2018/BO1 நாள்.31.01.2019ன் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.143.80 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 22.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 26.02.2019 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு ரூ.லட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| 1 | சிப்பம்–II<br>காந்தி நகர், பாவு தொழிலாளர் சங்க குறுக்கு தெரு, அண்ணா நகர், எமனேஸ்வரம் படேல் தெரு, முனியாண்டிபுரம் வடக்கு குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர் குறுக்குத் தெரு, மட்டா மன்னா பாகவதர் தெரு, கன்னிசுந்தரராஜன் தெரு ஆகிய தெருக்களில் பேவர்கல்தளம் அமைத்து வடிகால் அமைக்கும் பணி மற்றும் தர்மராஜபுரம் முதுவை டிம்பர் குறுக்கு தெரு, வி.பி. நகர் குறுக்கு தெரு, எமனேஸ்வரம், வடக்கு ரதவீதி, மாமாங்க தெப்பகுளம் முதல் தெரு, பெருமாள் கோவில் தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 143.80 | 1) திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர்4.92 % மதிப்பீட்டை விட கூடுதல்<br><br>2) திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர் 5.04% மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ. குழந்தையம்மாள் ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.92% கூடுதலாகவும், திரு. வி. மேகவர்ணம் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 5.04% கூடுதலாகவும், இருப்பதால் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி

<table>
<tr><td></td><td>ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.92% சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. ஐ. குழந்தையம்மாள், 4.92 % கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.34</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN65 W8911க்கு வருகிற 20.03.2019 உடன் தகுதிச்சான்றிதழ் முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்றிதழ் பெறும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.35</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN65 W8911க்கு தகுதிச்சான்றிதழ் பெறும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.28.02.2019ன்படி அனுமதி பெறப்பட்டு உள்ளூர் பணிமனைகளில் 07.03.2019ந் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 | M/s. செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி | ரூ. 50,300/—<br>2 | M/s. என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி | ரூ. 49,000/—<br><br>அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி உத்தரவு வழங்கயதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.36</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 1 முதல் 18 வரை சிறுமின் விசைப்பம்புகளை மக்கள் வெயில் காலங்களில் அதிகளவில் உபயோகப்படுத்தி வருவதால் சிறுமின்விசைப் பம்புகளில் உள்ள மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மோட்டார்களை பழுதுநீக்கி சரிசெய்தாலும் மறுபடியும் பழுதாகிவிடுகிறது. நகராட்சியின் நிதி வீணாவதை தவிர்க்கும் பொருட்டும், நிதி செலவை குறைக்கும் பொருட்டும் பொதுமக்களின் குடிநீரின் அத்தியாவசியம் கருதியும், மேற்படி வார்டுகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டால் சரிசெய்ய இயலாத பட்சத்தில் அதனை அகற்றி புதிதாக மாற்று மோட்டார்கள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.8.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
</table>

| | |
|---|---|
| பொருள்.37 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 19 முதல் 36 வரை சிறுமின் விசைப்பம்புகளை மக்கள் வெயில் காலங்களில் அதிகளவில் உபயோகப்படுத்தி வருவதால் சிறுமின்விசைப் பம்புகளில் உள்ள மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மோட்டார்களை பழுதுநீக்கி சரிசெய்தாலும் மறுபடியும் பழுதாகிவிடுகிறது. நகராட்சியின் நிதி வீணாவதை தவிர்க்கும் பொருட்டும், நிதி செலவை குறைக்கும் பொருட்டும் பொதுமக்களின் குடிநீரின் அத்தியாவசியம் கருதியும், மேற்படி வார்டுகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டால் சரிசெய்ய இயலாத பட்சத்தில் அதனை அகற்றி புதிதாக மாற்று மோட்டார்கள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.8.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.38 | இந்நகராட்சி வருவாய் நிதி (Revenue Fund), குடிநீர் நிதி (Water supply Fund), கல்வி நிதி (Education Fund) ஆகியவற்றிற்கான 2017–18ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2018–19ம் ஆண்டிற்கான எதிர்பார்ப்பு வரவு – செலவு மதிப்பீடும் தயார் செய்துள்ளது. மன்றத்தின் ஒப்பதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.39 | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட தேவேந்திர நகர் பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை சரிசெய்ய மேற்படி பணிகள் ரூ. 1.65 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><table><tr><td>1</td><td>திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர்</td><td>1.80% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr><tr><td>2</td><td>திரு. எஸ். சந்திரன்,<br>ஒப்பந்ததாரர்</td><td>0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr></table><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |
| பொருள்.40 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. மேற்படி ஆழ்துளை கிணறு தூர்ந்தும் மின் மோட்டாரனது இயக்க முடியாமல் உள்ளது. எனவே, எதிர்வரும் வறட்சியை சமாளிக்கும் பொருட்டு பொதுமக்களின் தண்ணீர் அத்தியாவசியம் கருதியும் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி ரூ.4,30,000/– மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். |

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர் | 0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. வி. மேகவர்ணம்<br>ஒப்பந்ததாரர் | 0.52% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

பொருள்.41

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 தேவேந்திர நகர் பகுதியில் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 1.80% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.42

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் காந்தி நகர் பகுதியில் வறட்சி காரணமாக சிறுமின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 0.52% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.43

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 36 வரை உள்ள சிறுமின் விசைப்பம்பில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>1.40% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>0.02% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
</table>
<br>
அலுவலகக்குறிப்பு –<br>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.44</td>
<td>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள சிறுமின் விசைப்பம்பில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.02% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>1.40% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.45</td>
<td>
இந்நகாட்சி வருவாய் நிதி (Revenue Fund), குடிநீர் நிதி (Water supply), கல்வி நிதி (Education Fund) ஆகியவற்றிற்கான 2017–18ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2018–19ம் ஆண்டிற்கான எதிர்பார்ப்பு வரவு–செலவு மதிப்பீடும் தயார் செய்துள்ளது. மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<br><br>
அலுவலகக் குறிப்பு–<br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
</tr>
</table>

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி